DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 113 /2023

Deposition of Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜாமணி | Father's/Husband's Name : பொன்னுச்சாமிதேவர் | |
| Village | : ராஜேந்திரநகர் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.11.2025

**1ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** வாதி, பிரதிவாதிகளை எனக்கு நன்கு தெரியும். தாவா சொத்தோடு மொத்தம் 11 செண்ட் நிலம் கோமதியம்மாள் கிரையம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து கொத்தாளமுத்துக்கு பாத்தியபபட்டது என்று பொய்யாக எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கோமதியம்மாள் இறப்பிற்கு முன்பு தாவா சொத்திற்கு எந்த ஏற்பாடும் செய்து வைக்கவில்லையென்று சொன்னால் சரிதான் . கொத்தாளமுத்திவின் பெயரில் உள்ள சொத்துக்கள் பொறுத்து அவருடன் சேர்ந்து வாதி, பிரதிவாதிகள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதே போல் கோமதியம்மாள் பெயரில் உள்ள சொத்துக்களை வாதி, பிரதிவாதிகள் தங்களுக்குள் சமமாக பிரித்து கொள்ள வேண்டும் என்றால் சரிதான்.

2) 4 நபர்களுக்கும் பாத்தியமுள்ள சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதியை விட்டு விட்டு வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் வாக்கரலாக பிரித்து கொண்டது தவறு என்று சொன்னால் சரிதான். அவர்களின் தகப்பனார் பிரித்து கொடுத்தார். கொத்தாளமுத்திற்கு தாவா சொத்தை பிரித்து கொடுக்க எந்த அதிகாரமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. அவர் பாகம் பிரித்து கொடுத்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கொத்தாளமுத்துவின் மகள் தான் 1ம் பிரதிவாதி ராஜேஸ்வரி என்றால் சரிதான். தாவா சொத்தை 4 காக பிரித்து பிறவி ஆச்சாரப்படி மேற்கு பக்கம் 1ம் பிரதிவாதி ராஜேஸ்வரிக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்

என்றால் 4 பாகமாக பிரிக்க வேண்டும் . எந்த பாகம் யாருக்கு என்று அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

3) மேற்கு பக்கம் உள்ள இடம் 1 ம்பிரதிவாதிக்கு கொடுக்க கூடாது என்பதற்காக வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் 10–15 வருடங்களகாக வாதி தான் குடியிருக்கிறார். வாதி 10–15 வருடங்களாக மேற்கு பக்கம் குடியிருப்பதற்கு நான் எதுவும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி 15 இலட்த்திற்கு வீடு கட்டியுள்ளார் என்று எதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் அந்த வீட்டின் மதிப்பு 10–15 இலட்சம் போகும் என்று சொல்லியுள்ளேன். கோமதியம்மாள் இறந்த பிறகு கொத்தாளமுத்து அவர் இறக்கும் வரை அந்த வீட்டில் குடியிருந்தார் என்றால் சரிதான். கொத்தாளமுத்து இறந்து 3 வருடங்கள் இருக்கும். வாதி பொய்யான விபரங்களை தாக்கல் செய்துள்ளதால் வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரிதான்.

**<u>2,3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் பிறந்ததிலிருந்தே ராஜேந்திரா நகரில் தான் குடியிருந்து வருகிறேன். வாதி , பிரதிவாதியின் இடமான ரோட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள இடத்தில் பால்பண்ணை வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். மேற்படி ,இடம் சம்மந்தமாக வாதி, பிரதிவாதிகளுக்குள் பிரச்சனை ஏற்பட்டு 1 ம் பிரதிவாதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. 1 ம் பிரதிவாதி பெண் என்பதால் அவருக்கு பாகம் கொடுக்க கூடாது என்பதற்காக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. வாதிக்கும், 1 ம் பிரதிவாதிக்கும் பால்பண்ணை இருந்த இடம் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டதால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் 1 ம் பிரதிவாதி வாதியை காலி செய்ய சொன்னதன் பெயரில் வாதி பால்பண்ணை இருந்த இடத்தை காலி செய்து கொடுத்தார். வாதி கேட்டு கொண்டதன் பெயரில் அவருக்கு ஆதரவாக இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு விபரம் எனக்கு சரியாக தெரியாததால் எனது சாட்சியம் நிராகரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open court on 24.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.11.24 21:55:21 +0530

District Munsif,
Aundipatti.